**ஜனவரி – 07**

# TNPSC துளிகள்

- சமீபத்தில் ஏற்பட்ட காட்டுத் தீ விபத்தின் காரணமாக ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.
- வேட்டி தினமானது ஜனவரி 06 ஆம் தேதியன்று தமிழ்நாட்டில் கொண்டாடப்பட்டது.
    - "வேட்டி தினத்தை" ஊக்குவிப்பதற்காக அரசு நடத்தும் கோ-ஆப்டெக்ஸ் எனப்படும் கைத்தறி கூட்டுறவு அமைப்பானது தீவிரமாகப் பணியாற்றியது.
- 107வது இந்திய அறிவியல் மாநாட்டின் ஒரு பகுதியாக 2020 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் தேதியன்று யோகா அறிவியல் கூட்டமானது பெங்களூரில் நடத்தப்பட்டது.
    - நோய்களில் இருந்து பாதுகாக்க யோகா எவ்வாறு உதவுகின்றது என்பது குறித்து இந்தக் கூட்டம் விவாதித்தது.

# தேசியச் செய்திகள்

## இளம் விஞ்ஞானிகளுக்கான ஆய்வகங்கள்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (Defence Research and Development Organisation - DRDO) இளம் விஞ்ஞானிகளுக்கான 5 ஆய்வகங்களை பிரதமர் தொடங்கி வைத்தார்.
- ஐந்து ஆய்வகங்கள் பின்வருமாறு:
    - செயற்கை நுண்ணறிவு குறித்த ஆராய்ச்சியானது பெங்களூரில் உள்ள ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.
    - குவாண்டம் தொழில்நுட்ப ஆய்வகமானது மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தில் செயல்பட இருக்கின்றது.
    - சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தில் அமையவிருக்கும் ஒரு ஆய்வகத்தில் அறிவாற்றல் தொழில்நுட்பம் குறித்த ஆராய்ச்சியானது மேற்கொள்ளப்பட இருக்கின்றது.
    - சமச்சீரற்ற தொழில்நுட்பங்கள் குறித்த ஆராய்ச்சியானது கொல்கத்தாவின் ஜாதவ்பூர் பல்கலைக்கழக வளாகத்தில் அமைய இருக்கும் ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.
    - திறன்மிகு பொருள்கள் குறித்த ஆராய்ச்சியானது ஹைதராபாத்தில் உள்ள ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.
- DRDO அமைப்பானது ஏற்கனவே 52 ஆய்வகங்களைக் கொண்டுள்ளது.
- இராணுவத்தில் செயற்கை நுண்ணறிவின் (AI – Artificial Intelligence) பயன்பாடு குறித்து ஆய்வு செய்வதற்காக என். சந்திரசேகரன் தலைமையிலான குழு ஒன்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகத்தினால் 2018 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

## பொது – தனியார் பங்களிப்பின் கீழ் மருத்துவக் கல்லூரிகளை அமைத்தல்

- அரசின் கொள்கை வகுக்கும் நிறுவனமான நிதி ஆயோக் ஆனது "பொது தனியார் பங்களிப்பின் கீழ் மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கான மாதிரிச் சலுகை ஒப்பந்தம்" (Public Private Partnership - PPP) என்ற ஒரு வரைவு வழிகாட்டுதல் ஆவணத்தை

வெளியிட்டுள்ளது.

- பல்வேறு அறிக்கைகளின் படி, புதிய அல்லது ஏற்கனவே உள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளை தற்பொழுது செயல்பாட்டில் உள்ள மாவட்ட மருத்துவமனையுடன் இணைப்பதற்காக PPP மாதிரியை நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது.
- இந்த ஆலோசனையானது மருத்துவக் கல்வியில் உள்ள வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் நிதி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இருக்கின்றது.
- இந்த மாதிரியானது ஏற்கனவே குஜராத் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் செயல்பட்டு வருகின்றது.
- மேலும் இது நாட்டில் உள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியோரின் பற்றாக்குறையின் இடைவெளியைக் குறைக்க உதவ இருக்கின்றது.
- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப் படி, நாட்டில் 10,189 நபர்களுக்கு ஒரே ஒரு அரசு மருத்துவர் மட்டுமே இருக்கின்றார்.
- மேலும் இந்தியாவில் 2 மில்லியன் செவிலியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்.

## விவசாயிகள் அறிவியல் மாநாடு

- 2020 ஆம் ஆண்டு ஜனவரி 3 அன்று 107வது இந்திய அறிவியல் மாநாட்டைப் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.
- இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக, முதல்முறையாக விவசாயிகள் அறிவியல் மாநாடானது நடத்தப் பட்டது.
- தற்போதைய சூழ்நிலையில் உற்பத்தித் துறையில் தன்னிறைவு பெறுவதிலிருந்து ஊட்டச்சத்துப் பாதுகாப்பை நோக்கி சமுதாயம் நகர்வதால் இந்த மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.
- இந்த நிகழ்வின் போது ARYA போன்ற திட்டங்களின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தப் பட்டது.
- விவசாயிகள் அறிவியல் மாநாடானது பின்வரும் 3 வெவ்வேறு கருப்பொருள்களின் கீழ் நடைபெற்றது.
    - விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கு ஒருங்கிணைந்த வேளாண்மை மற்றும் தொழில்முனைவோர் மீதான விவசாயிகளின் புத்தாக்கம்.
    - காலநிலை மாற்றம், உயிரிப் பன்முகத்தன்மை மற்றும் பாதுகாப்பு.
    - விவசாயத்தின் துயரங்கள், விவசாயிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் கிராமப்புற உயிரித் தொழில் முனைவோர்.

### *ARYA*

- ARYA என்பது விவசாயத் துறையில் இளைஞர்களை ஈர்ப்பது மற்றும் அவர்களைத் தக்க வைப்பது என்பதாகும்.
- இது இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தினால் (Indian Council of Agricultural Research – ICAR) செயல்படுத்தப் பட்டு வருகின்றது.
- இந்த திட்டமானது விவசாயத் துறையின் கீழ் இளைஞர்களைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது
- கிராமப்புறங்களில் இருந்து நகர்ப்புறங்களுக்கு இளைஞர்களின் இடம்பெயர்வு அதிகரிப்பதைத் தடுப்பதற்காக இந்தத் திட்டமானது தொடங்கப் பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## சல்லகேர் - மனித விண்வெளி விமான உள்கட்டமைப்பு மையம்

- கர்நாடகாவின் சித்திரதுர்கா மாவட்டத்தின் சல்லகேரில் மனித விண்வெளிப் பயண உள்கட்டமைப்பு மையத்தை அமைக்க இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
- இந்த மையமானது மூன்று ஆண்டுகளில் செயல்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்த மையமானது தேசிய நெடுஞ்சாலை – 4ல் (பெங்களூரு – புனே) அமைக்கப்பட உள்ளது.
- தற்போது, இஸ்ரோவின் மனித விண்வெளிப் பயணத் திட்டமான ககன்யான் திட்டத்தில் கலந்து கொள்ளும் விண்வெளி வீரர்கள் ரஷ்யாவில் பயிற்சி பெறுகின்றனர்.
- இந்த மையமானது ரஷ்யாவினால் வழங்கப்பட்ட அனைத்து வசதிகளையும் இந்தியாவிற்குள் கொண்டு வருவதையும் இந்தியாவிற்குள் விண்வெளி வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ககன்யான் திட்டத்தில் வெற்றி பெற்றால், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு அடுத்து மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பிய நான்காவது நாடாக இந்தியா உருவெடுக்க இருக்கின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கானமயில் – இனப்பெருக்கம்

- கானமயில் (ஆர்டியோடிஸ் நிக்ரிசெப்ஸ் - Great Indian Bustard) இனப்பெருக்கத்தில் இந்தியா ஒரு வெற்றிகரமான உலக சாதனையைப் படைத்துள்ளது.




- தற்பொழுது இந்த இனத்தில் 150 பறவைகள் உலகளவில் எஞ்சியுள்ளன என்று மதிப்பிடப் பட்டுள்ளது.
- இது இந்திய துணைக் கண்டத்தில் மட்டுமே வாழும் ஒரு பறவை இனமாகும்.

- இது இந்தியாவில் உள்ள ராஜஸ்தான் (பாலைவன தேசியப் பூங்கா), குஜராத், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் பாகிஸ்தானின் சில பகுதிகளிலும் காணப்படுகின்றது.

***பாதுகாப்பு நிலை:***

- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் சிவப்பு பட்டியலில் இது "மிக அருகிய இனமாக" வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- இந்திய வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972ன் அட்டவணை Iல் இது பட்டியலிடப் பட்டுள்ளது.
- CITES இன் (அருகிவரும் வனவிலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகம் மீதான ஒப்பந்தம் - Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora) அட்டவணை Iல் பட்டியலிடப் பட்டுள்ளது.

***பாதுகாப்பு நடவடிக்கைகள்***

- கானமயில் திட்டம்:
  - இது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ராஜஸ்தான் அரசின் ஒரு திட்டமாகும்.
  - பாலைவன தேசியப் பூங்காவில் இந்தப் பறவைகள் வெற்றிகரமாக இனப்பெருக்கம் செய்வதை உறுதி செய்வதற்காக இந்தப் பறவைகளுக்கான வாழிடங்களை அமைத்தல் மற்றும் இந்தப் பறவைகள் வாழும் பகுதிகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை மேற்கொள்ள இது திட்டமிட்டுள்ளது.
- கானமயில் மீட்புத் திட்டம்:
  - இது மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தினால் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

# மாநிலச் செய்திகள்

## சோ குட்பூய் திருவிழா

- மிசோரம் மாநில அரசானது சோ குட்புய் என்ற விழாவை ஏற்பாடு செய்து வருகின்றது.
- இத்தகைய திருவிழாவை நடத்துவதன் மூலம், மிசோரம் அரசானது நாட்டிலும் உலகெங்கிலும் உள்ள மிசோர மக்களை ஒன்றிணைக்க முயற்சிக்கின்றது.
- இந்நிகழ்ச்சியானது பல்வேறு மிசோரப் பழங்குடியினரின் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குகின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## உலகப் புத்தகக் கண்காட்சி - புது தில்லி

- புது தில்லி உலகப் புத்தகக் கண்காட்சியானது இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்புடன் இணைந்து தேசியப் புத்தக அறக்கட்டளையினால் (National Book Trust - NBT) ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இந்த கண்காட்சியானது தெற்காசியாவின் அறிவுசார் உலகிற்கு ஒரு நுழைவாயிலாகவும் செயல்படுகின்றது.
- இந்தக் கண்காட்சியின் கருப்பொருள் "காந்தி, எழுத்தாளர்களின் எழுத்தாளர்" என்பதாகும்.
- 12,000க்கும் மேற்பட்ட வெளியீட்டாளர்களுடன் ஆங்கில வெளியீடுகளுக்கான

மூன்றாவது பெரியச் சந்தையாக இந்தியா இருப்பதால் இந்தியச் சந்தைக்கு இந்த கண்காட்சி முக்கியமானதாக விளங்குகின்றது.

***தேசியப் புத்தக அறக்கட்டளை***

- 1957 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தியப் புத்தக வெளியீட்டு நிறுவனமானது மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- இதன் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது.

## கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள்

- கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டின் 3வது பதிப்பானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அசாமின் குவஹாத்தியில் நடைபெற உள்ளது.
- கேலோ இந்தியா விளையாட்டை 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.
- இந்த விளையாட்டானது இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன:
    - 17 வயதுக்குட்பட்ட பள்ளி மாணவர்கள்.
    - 21 வயதுக்குட்பட்ட கல்லூரி மாணவர்கள்.
- இந்தத் திட்டத்தின் கீழ், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளுக்கு 1000 குழந்தைகளைத் தயார்படுத்துவதற்காக அக்குழந்தைகளுக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 5,00,000 உதவித் தொகை வழங்கப் படுகின்றது.
- இந்த நிகழ்வானது ஒவ்வொரு ஆண்டும் 20 பிரிவுகளில் நடத்தப்பட உள்ளது.
- இந்த நிகழ்வில் அனைத்து 36 மாநிலங்களும் ஒன்றியப் பிரதேசங்களும் பங்கேற்க உள்ளன.

# விளையாட்டுச் செய்திகள்

## சென்னை மராத்தான் 2020

- சென்னை மராத்தான் 2020 போட்டியில் கென்யாவைச் சேர்ந்த ஃபெலெக்ஸ் ராப் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த கே சுகுணா ஆகியோர் முறையே ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் முழு மராத்தான் ஓட்டத்தையும் நிறைவு செய்து, வெற்றி பெற்றுள்ளனர்.
- சென்னை மராத்தானின் 8வது பதிப்பான ஸ்கெச்சர்ஸ் செயல்திறன் சென்னை மராத்தான் - 2020 ஆனது சென்னையில் நடைபெறும் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வாகவும் இந்தியாவில் நடைபெறும் இரண்டாவது பெரிய போட்டியாகவும் விளங்குகின்றது.
- முன்பு இது “தி விப்ரோ சென்னை மராத்தான்” என்று அழைக்கப்பட்டது.
- இது 2006 ஆம் ஆண்டு முதல் ஆர்வமுள்ள ஓடும் வீரர்கள் - தன்னார்வலர்களால் நடத்தப்படும் இலாப நோக்கற்ற அமைப்பான சென்னை ரன்னர்ஸ் என்ற அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




## முக்கிய தினங்கள்

### போரின் போது ஆதரவற்றவர்களுக்கான உலக தினம் - ஜனவரி 06

- இந்த சிறப்புத் தினமானது சர்வதேச சமூகத்திற்கு உலகப் போரின் போது உண்டான ஆதரவற்றவர்களின் துன்பங்களையும் அவலங்களையும் அடையாளம் காண உதவுகின்றது.
- இந்தத் தினமானது "SOS Enfants en Detresses" என்ற பிரெஞ்சு அமைப்பால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.



# இதரச் செய்திகள்

## வட கிழக்குப் பருவமழை

- இந்த ஆண்டின் வடகிழக்குப் பருவமழை அதிக அளவில் பெய்து நிறைவடைந்துள்ளது. இந்தப் பருவத்தின் மொத்த மழைப்பொழிவு வழக்கத்தை விட 30 சதவீதம் உபரியாகப் பதிவாகியுள்ளது.
- அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை வடகிழக்கு பருவமழைக்கான காலமாக இந்திய வானிலை ஆய்வு மையம் (India Meteorological Department - IMD) அங்கீகரிக்கின்றது.
- இந்தக் காலகட்டத்தில், தமிழகம், கேரளா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் கர்நாடகாவின் சில பகுதிகளில் மழை பெய்யும்.
- 2019 ஆம் ஆண்டானது வட இந்தியப் பெருங்கடல் சூறாவளி பருவங்களில் மிகுந்த செயல்பாடு கொண்ட ஒன்றாகப் பதிவாகியுள்ளது.
- இந்தியாவிலும் அதைச் சுற்றிலும் எட்டு சூறாவளிப் புயல்கள் உருவாகின. 1976 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரே ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான சூறாவளிகள் இங்கு உருவாகியுள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★